# பிரிக்பீல்ட்சில் தீபாவளிச் சந்தை
# வியாபாரிகள் பிரச்சினைக்கு
# டிபிகேஎல் தீர்வு



கோலாலம்பர், அக். 22-

பிரிக்பீல்ட்சில் பாதிக்கப்பட்ட 6 வியாபாரிகளுக்கு உதவும் வகையில் கோலாலம்பூர் மாநகர் மன்றத் தரப்பு (டிபிகேஎல்) உடனடியாக 3 கூடாரங்களை கூடுதலாக அமைத்துள்ளது.

பிரதமர்துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தாபா பரிந்துரைத்ததுபோல் தீபாவளிச் சமயத்தில் விற்பனை செய்ய சம்பந்தப்பட்ட வியாபாரிகளுக்கு வாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்ய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக டிபிகேஎல் தரப்பு தெரிவித்துள்ளது.

சொந்த ஒப்புதலின் அடிப்படையில் 4 வியாபாரிகளுக்கு மேலும் இரண்டு கூடாரங்களை அமைப்பதற்கான மாற்று இடத்தை ஏற்பாட்டாளர்கள் கண்டறிவர். இந்தப் பெருநாள் காலகட்டத்தில் அனைத்து வியாபாரிகளும் வருமானம் ஈட்டுவதற்கு இந்தச் செயல்பாடுகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்ய டிபிகேஎல் தரப்பு பொறுப்புடைமை கொண்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தகவல் உள்ளது.

முன்னதாக பிரிக்பீல்ட்சில் இதற்கு முன் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படாத தீபாவளிச் சந்தையில் 10 வியாபாரிகளுக்கு உதவும்படி கடந்த சனிக்கிழமையன்று அமைச்சர் ஸலிஹா, டத்தோ பண்டாரான டத்தோஸ்ரீ மைமுனாவிடம் கேட்டுக் கொண்டார் என சினார் ஹரியான் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.